# காரைதீவு மக்கள் ஒன்றியம் கனடா

KARAITIVU PEOPLE ASSOCIATION OF CANADA - KPAC

---

சித்திரை வருடப் பிறப்புக் கொண்டாட்டமும்
ஒன்று கூடலும் 07. 05. 2016

கனடாவில் வாழும் காரைதீவு மக்கள் ஒன்றாய் இணைந்து கடந்த சில ஆண்டுகளாக ஒன்றுகூடல் நிகழ்ச்சியை நடத்தி, எம்மிடையே ஒற்றுமையையும் பரஸ்பர நல்லுணர்வையும் வளர்த்துவருகின்றோம். இவ்வாண்டின் சிறப்பு நிகழ்வாகச் சித்திரை வருடப் பிறப்புக் கொண்டாட்டமும் ஒன்று கூடலும் இடம்பெறவுள்ளன. இவ்விரு நிகழ்வுகளும் 2016, மே மாதம் 07 ஆந் திகதி சனிக்கிழமை **5400, Dixie Road, Mississauga, L4W 4T4** என்ற முகவரியில் அமைந்துள்ள **Sandman Signature Mississauga Hotel** இல் ஒன்றுகூடல் நிகழ்ச்சி மாலை 6:00 மணிக்கு ஆரம்பமாகும் என்பதை அறியத்தருகின்றோம்.

உங்களது பிள்ளைகள் இத்தினத்தை மகிழ்வாகக் களிக்கும் வகையில் பல கலை நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

நம் ஊரவர், உறவினர் எல்லோரும் ஒன்றாக அமர்ந்திருந்து, இரவு உணவு உண்டு களித்து, இந்நிகழ்ச்சியைச் சிறப்பிக்குமாறு ‘காரைதீவு மக்கள் ஒன்றியம் கனடா’ நிர்வாகசபை உறுப்பினரகளாகிய நாங்கள், காரைதீவு மக்கள் அனைவரையும் வருக வருக என வரவேற்கிறோம்.

உறவை வளர்ப்போம் உயர்வாய் வாழ்வோம்.

நன்றி வணக்கம்.

காரைதீவு ஒன்றிய நிர்வாகக் குழு

**Contact:** MR.PUVAN: 905 495 32240 DR. Bala : 416 267 5255

Mr. Chandran: 647 201 3528 Mr. Yogan: 647 404 1927

---